


**07. 07. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - இந்தோனேசியா நாடுகள் இடையே ராணுவ பரிவர்த்தனை, பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட பிரிவுகளில் ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி அறிவித்துள்ளார்.

2. போரூரிலும், செங்கல்பட்டிலும் அமைந்துள்ள ஹிட்டாச்சி நிறுவனங்களின் விரிவாக்க திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் திரு. விஜய் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

3. தமிழ்நாட்டில் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் 100 சதவிகிதம் நேர்மையாகவும் நியாயமாகவும் நடைபெறும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறையில் பல சீர்திருத்தங்கள் படிப்படியாக அறிவிக்கப்படும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் கூறியுள்ளார்.

5. நீலகிரி மாவட்டம் கூடலூர் பாண்டியாற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்..

<u>இனி விரிவான செய்திகள்</u>

*************

பிரதமர்

இந்தியா இந்தோனேசியா இடையிலான விரிவான நட்புறவு புதிய கட்டத்தை எட்டியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ஜகார்த்தாவில் நடைபெற்ற பிரதிநிதி நிலையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் அதிபர் பிரபாவோ சுபியாண்டோவுடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசுகையில் ராணுவம், பாதுகாப்பு, கடல்சார் பிரிவுகளில் பரஸ்பர நம்பக தன்மையுடன் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

இருநாடுகளுக்கிடையே ராணுவ பரிவர்த்தனை பேரிடர் மேலாண்மை ஒத்துழைப்பு தொழில் கூட்டமைப்பு பிரிவுகளில் ஒத்துழைப்பு விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் பரஸ்பர நலன் சார்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இதனிடையே இந்தோனேசியா குடியரசின் மிக உயரிய Bintang அதி பூரனா கவுரவ விருதை பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு அதிபர் பிரபாவோ சுபியாண்டா அறிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையிலான வரலாற்று சிறப்பு மிக்க நட்புறவை வலுப்படுத்தி ஆழப்படுத்திய பிரதமரின் அர்ப்பணிப்பை போற்றும் வகையில் இந்த விருது அளிக்கப்படுகிறது.

*************

சுரேஷ்கோபி

மாசு காரணமாகவும், கரியமில வாயு வெளியேற்றப்படுவதாலும், பாதிக்கப்படும் சுற்றுசூழலை பாதுகாக்க அதிக அளவு மரக்கன்றுகள் நடப்பட வேண்டும் என்று மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத்துறை இணை அமைச்சர் திரு.சுரேஷ்கோபி தெரிவித்துள்ளார்.

கோவையில் தனியார் கல்லூரியில் இன்று நடைபெற்ற தூய்மை இயக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர், சுற்றுச்சூழலை தூய்மையின் அவசியத்தை உணர்ந்து பிரதமர் தூய்மை பாரத இயக்கத்தை தொடங்கியதை எடுத்துரைத்தார்.

இதனால் தூய்மை குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டதாகவும் இதன் தொடர்ச்சியான தூய்மை இயக்கத்தின் மூலம் மாணாக்கர் தூய்மை நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் தூய்மையான பாரதத்தை உருவாக்கி பசுமை பரப்பளவை அதிகரிக்க அமைச்சர் தலைமையில் மாணாக்கர் உறுதி மொழி ஏற்றனர்.

*************

<u>இரட்டைமலை சீனிவாசன்</u>

விடுதலை போராட்ட வீரர் இரட்டைமலை சீனிவாசனின் 167ஆவது பிறந்தநாளை ஒட்டி குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் புதுதில்லியில் அவரது திருவுருவ படத்திற்கு மலர் துவி மரியாதை செலுத்தினார்.

முதலமைச்சர் திரு.விஜய் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் சமூக நீதியின் முன்னோடியாகவும், ஒடுக்கப்பட்டவர்களின் உரிமை குரலாகவும் திகழ்ந்த அன்னாருக்கு மரியாதை செலுத்துவதாக கூறியுள்ளார்.

நலிவடைந்த மக்களின் அரசியல் உரிமைகளுக்காக குரல் கொடுத்த இரட்டைமலை சீனிவாசனுக்கு வணக்கங்களை உரித்தாக்குவதாக திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்நாளை ஒட்டி சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் உள்ள அன்னாரது சிலைக்கு மாநில அமைச்சர்களும், அஇஅதிமுக மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் மரியாதை செலுத்தினர்.

*************

ஹிட்டாச்சி

சென்னை போரூர் மற்றும் செங்கல்பட்டில் அமைந்துள்ள ஹிட்டாச்சி எரிசக்தி நிறுவனங்களின் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான விரிவாக்க திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் திரு.விஜய் முன்னிலையில் இன்று கையெழுத்தாயின.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வின் ஒருபகுதியாக ஆயிரம் உயர்தர தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட உள்ளது.

மாநில தொழில்துறை அமைச்சர் எஸ்.கீர்த்தனா மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

*************

முதலமைச்சர்

தமிழக பட்ஜெட்டிற்கு முந்தைய துறை வாரியான ஆலோசனைகளின் ஒருபகுதியாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் உயர் அதிகாரிகளுடன் முதலமைச்சர் இன்று ஆலோசனை மேற்கொண்டார்..

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயல்பாடுகள் பட்ஜெட்டில் அறிவிக்க வேண்டிய திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

*************

முதலமைச்சர் நிவாரணம்

கடலூர் மாவட்டம் பன்ருட்டி அருகே நேற்றுமுன்தினம் நேரிட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த நான்குபேரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்ச ரூபாய் வழங்க முதலமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோருக்கு தலா ஒரு லட்ச ரூபாயும்,

லேசான காயமடைந்தவருக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

*************

<u>நிர்மல் குமார்</u>

தமிழ்நாட்டில் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் 100 சதவிகிதம் நேர்மையாகவும் நியாயமாகவும், நடைபெறும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலம் முழுவதும் 800 அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட உள்ளதாகவும், நாளைமாலைக்குள் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் இறுதி செய்யப்படும் என்றும் கூறினார்.

தற்போதைய நியமனம் தற்காலிகமானது என்று கூறிய அமைச்சர், வழக்கறிஞர்களின் செயல்பாடுகளை பொறுத்தே 6 மாதங்களுக்கு பின்னர் நியமனம் நிரந்தரம் செய்யப்படும் என்றும் கூறினார்.

*************

<u>ரமேஷ்</u>

தமிழக திருகோவில்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சி ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவாணைக்காவல் பகுதிகளில் பொதுமக்கள் குறைதீர் நாள் முகாமில் மனுக்களை பெற்றுக்கொண்ட பின்னர் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் நாட்களில் மணிகண்டம், அந்தநல்லூர் பகுதிகளில் முகாம்கள் நடத்தப்படும் என்றார்.

ஸ்ரீரங்கம் கிழக்கு கோபுர வாசல் பணிகள் விரைவு படுத்தப்பட்டு விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைக்கப்படும் என்றார்.

திருச்செந்தூர் கோவில் உட்பட எக்கோவிலிலும் தற்போது கட்டண உயர்வு அமல்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

திருக்கோவில்களில் வி.ஐ.பி. தரிசன முறையை ஒழுங்குபடுத்துவது குறித்து ஆலோசனைகள் நடைபெறுவதாக கூறினார்.

திருச்சி மாவட்டத்தில் போதை பொருள் விநியோகத்தை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆய்வு நடத்தப்பட்டு இரவு நேர ரோந்து பணிகளை தீவிரபடுத்த காவல்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கூறினார்.

ஸ்ரீரங்கம் யாத்ரி நிவாஸ் முன்பதிவில் பாதுகாப்பான ஆன்லைன் வசதியை அறிமுகப்படுத்த ஆலோசனைகள் நடைபெறுவதாக தெரிவித்தார்.

இந்து சமய அறநிலையத்துறையில் பல சீர்திருத்தங்கள் படிப்படியாக அறிவிக்கப்படும் என்றும் கூறினார்.

*************

<u>நீதிமன்றம்</u>

தமிழக முதலமைச்சர் திரு. விஜய்-இன் தேர்தல் வெற்றி செல்லாது என அறிவிக்க கோரிய நான்கு மனுக்கள் தொடர்பாக தேர்தல் ஆணையமும், முதலமைச்சரும் மூன்று வாரங்களுக்குள் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதியில் முதலமைச்சரின் வெற்றியை எதிர்த்து திமுக சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை இன்று விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி லக்ஷ்மி நாராயணன் இதற்கான உத்தரவை பிறப்பித்து இவ்வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

இதேபோல் அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜூனாவிற்கு எதிரான வழக்குகளிலும் தேர்தல் ஆணையமும் ஆதவ் அர்ஜூனாவும் 3 வாரங்களில் பதில் அளிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

*************

<u>மதன்ராஜா</u>

தமிழ்நாடு கைத்தறி தொழில்கள் துறையின் பூம்புகார் கைவினை பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனையை மாநில குறு சிறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.மதன் ராஜா சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

*************

<u>நீலகிரி</u>

நீலகிரி மாவட்டம் கூடலூர் சுற்றுப்புற பகுதிகளில் பெய்து வரும் கன மழையால் பாண்டியாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

<u>தேனி</u>

தேனி மாவட்டம் போடி மேற்குதொடர்ச்சி மலை அடிவார பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்றுடன் புழுதி புயல் வீசுவதால் வாகன ஓட்டிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

கடத்தல்

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து இன்று அதிகாலை, நாட்டு படகில் இலங்கைக்கு கடத்துவதற்காக காரில் கொண்டு செல்லப்பட்ட 120 பந்தய புறாக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் கைப்பற்றப்பட்டது,

இதுதொடர்பாக இருவரிடம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் கடலுக்குள் தப்பிச்சென்ற நாட்டுப்படகுகள் குறித்து கடலோர காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

*************

போராட்டம்

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தாழவேடு காலனியில் 600க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் கடந்த நான்கு நாட்களாக தொடர்ச்சியாக தண்ணீர் வராததால் அப்பகுதியில் உள்ள பெண்கள் காலிக்குடங்களுடன் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து அப்பகுதி சட்ட ஒழுங்கு ஆய்வாளர் தலைமையில் காவல்துறையினர் நீண்ட நேரம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

*************

கிரிக்கெட்

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான 3ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி நாட்டிங்ஹாமில் இன்றிரவு 10 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*************

<u>கால்பந்து</u>

FIFA உலக கோப்பை கால்பந்து போட்டிகளின் காலிறுதிக்கு பெல்ஜியம் முன்னேறியுள்ளது.

சியாட்டிலில் நடைபெற்ற ஆட்டத்தில் பெல்ஜியம் – அமெரிக்காவை 4-1 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்கு முன்னேறியது..

காலிறுதியில் பெல்ஜியம் – ஸ்பெய்னை வரும் வெள்ளிக்கிழமை லாஸ் ஏஞ்சல்சில் எதிர்கொள்ளும்.

அட்லாண்டாவில் இன்றிரவு ஒன்பதரை மணிக்கு அர்ஜென்டினா – எகிப்துடன் மோதுகிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது